பொருளடக்கம்

*

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 18

முன்னுரை / 23

பகுதி 1 மதீனாவின் மகத்துவமும் சிறப்புகளும் / 29

1 அல்லாஹ்வின் தூதருடைய மதீனா / 31

2 மதீனாவின் பொதுவான சிறப்புகள் / 33

1. மதீனாவில் தங்குவதன் சிறப்பு / 33

2. மனிதர்களில் கெட்டவர்களையும் குழப்பக்காரர்களையும் வெளியேற்றும் / 33

3. ஈமான் மதீனாவின் பக்கமே மீளும் / 34

4. தஜ்ஜாலிலிருந்தும் தொற்று நோயிலிருந்தும் மதீனா பாதுகாக்கப்படும் / 34

5. மதீனாவின் பரக்கத் - அருள்வளம் / 35

6. மதீனாவில் தங்குவதன் சிறப்பும் அதன் கஷ்டங்களில் பொறுமை காப்பதும் / 36

7. மதீனா புண்ணிய பூமியாகும் / 36

8. மதீனாவாசிகளுக்குக் கெடுதல் நாடுவோருக்கான எச்சரிக்கை / 39

3 மதீனாவின் பிரத்தியேகமான சிறப்புகள் / 40

1. மஸ்ஜிதுந் நபவீயில் தொழுவதன் சிறப்பு / 40

2. சங்கைமிக்க 'ரவ்ழா'வின் சிறப்பு / 41

3. உஹுது மலை / 41

4. வாதிஉல் அகீக் – அகீக் பள்ளத்தாக்கு / 42

5. அஜ்வா – மதீனாவில் விளையும் ஒரு வகை ஈத்தம் பழம் / 42

பகுதி 2 தரிசித்தலில் ஆர்வமூட்டப்பட்டவையும்
தடைசெய்யப்பட்டவையும் / 43

1 மதீனா பயணமும் மார்க்கமும் / 45

2 தரிசிப்பது ஆர்வமூட்டப்பட்ட இடங்கள் / 46

1. மஸ்ஜிதுந் நபவீயும் அதற்காகவே பிரயாணம் செய்வதும் / 46

2. குபா மஸ்ஜித் / 50

3 தரிசிப்பது ஆர்வமூட்டப்படாத விசயங்கள் / 54

4 தரிசிப்பது மார்க்கத்தில் சிறப்பிக்கப்படாத
வேறு சில இடங்கள் / 58

நபியவர்கள் நடமாடிய இடங்கள் / 58

நபித்தோழர்கள் செய்யாததைச் செய்யக் கூடாது / 59

5 நபி ﷺ அவர்களின் மண்ணறையைத் தரிசித்தல் / 61

1. அல்லாஹ் ஏற்படுத்திய கட்டுப்பாடுகள் / 61

2. எங்கிருந்தும் ஸலவாத்தை,
ஸலாமைச் சொல்லலாம் / 63

3. ஸலாமின் ஒழுங்குகளைப் பேணுதல் / 67

4. நுழையும்போதெல்லாம் மண்ணறைக்குச் செல்வது
நபித்தோழர்கள் வழிமுறை அல்ல / 69

5. பித்அத்துகளைச் செய்யக் கூடாது / 71

6. நபியவர்களின் மண்ணறை இருப்பது மஸ்ஜிதில் அல்ல / 80

6 பகீஉ மற்றும் உஹுது ஷுஹதாக்களின்
மண்ணறைகளைத் தரிசித்தல் / 81

1. மறுமையை நினைவுகூர்தல்; ஒப்பாரியைத் தவிர்த்தல் / 81

2. வணக்கத்தலங்களாக ஆக்குதல் கூடாது / 81

3. பெண்கள் மண்ணறைகளைத் தரிசித்தல்
குறித்த எச்சரிக்கை / 83

பகுதி 3 நபி ﷺ அவர்களையும் அவர்களின்
தோழர்களையும் நேசித்தல் / 85

1 நபி ﷺ அவர்களை நேசிப்பதன் முக்கியத்துவம் / 87

நபியவர்கள் அனைவருக்குமான தூதர் / 87

நபியவர்கள் அல்லாஹ்வின் ஓர் அருட்கொடை / 87
நபியவர்களை நேசிப்பது ஈமானின் உண்மைநிலை / 89
நபியவர்கள்மீதான நேசத்தின் அடையாளம் / 92
2 நபி ﷺ அவர்கள்மீதான நேசத்தின் அடையாளங்கள் / 94
1. பூரணமான முறையில் கவுரவப்படுத்தலும் கண்ணியப்படுத்தலும் / 94
2. கட்டுப்படுதலும் முன்மாதிரியாக எடுத்துக்கொள்தலும் / 96
3. நபி ﷺ அவர்கள் சொல்லும் செய்திகளை உண்மைப்படுத்தல் / 99
4. அவரது வழிமுறையைப் பின்பற்றுவதற்கு அழைப்பு விடுப்பதும் அதைக் கவுரவப்படுத்தலும் / 100
5. மார்க்கத்தில் புதிதாக நூதன அனுஷ்டானங்களை உருவாக்கக் கூடாது / 101
6. நபி ﷺ அவர்கள்மீது அதிகம் ஸலவாத்து கூறுதல் / 103
7. நபி ﷺ அவர்களிலே எல்லைமீறிப் போகாமலிருத்தல் / 104
3 நபித்தோழர்களின் சிறப்புகள் / 107
ஸஹாபி என்றால் / 107
அல்லாஹ்வினால் பொருந்திக்கொள்ளப்பட்டவர்கள் / 107
அல்லாஹ்வினால் வேதங்களில் முன்னறிவிக்கப்பட்டவர்கள் / 107
மனிதர்களில் மிகச் சிறந்தவர்கள் / 109
4 நபித்தோழர்களின் உரிமைகள் / 111
5 அஹ்லுல் பைத்தினரின் உரிமைகள் / 119
முடிவுரை / 122

1

அல்லாஹ்வின் தூதருடைய மதீனா

*

மதீனாவும் இஸ்லாமும்

மதீனா என்பது அல்லாஹ்வின் தூதருடைய நகரமாகும். நபி மூஸ்தஃபா ﷺ அவர்கள் தியாகப் பயணம் (ஹிஜ்றத்) மேற் கொண்ட பூமியாகும். பொதுவாக மதீனா என்று அழைக்கப் படும்போது அது நபிகளாரின் இந்த நகரத்தைத்தான் குறிக்கும். அல்லாஹ் கூறுகிறான்:

مَا كَانَ لِأَهْلِ الْمَدِينَةِ وَمَنْ حَوْلَهُمْ مِنَ الْأَعْرَابِ

மதீனாவாசிகள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள நாட்டுப்புற அறபிகள்... (குர்ஆன் 9:120)

இதல்லாத வேறு நகரங்களைப் பற்றிப் பேசப்பட்டால் அதைக் குறிக்கும் வகையில் பிரத்தியேக வார்த்தைப் பிரயோகங்கள் பாவிக்கப்படும்.

ஹாஃபிள் இப்னு ஹஜர் ﵀ கூறுகிறார்: 'மதீனா, நபி ﷺ அவர்கள் ஹிஜ்றத் செய்ததும், பின்பு அடக்கம் செய்யப்பட்டதுமான பிரபல்யமான நகரத்தின் பெயராகும். அல்லாஹ் கூறுகிறான்:

يَقُولُونَ لَئِنْ رَجَعْنَا إِلَى الْمَدِينَةِ

அவர்கள் கூறுகிறார்கள், 'நாங்கள் மதீனாவுக்குத் திரும்பினால்' (குர்ஆன் 63:8)

எனவே, பொதுவாகக் குறிப்பிடப்பட்டால் அதைத்தான் குறிக்கும். மதீனா என்ற பதத்தின் மூலம் வேறு நகரங்கள் நாடப்படுமாயின் அவசியம் அதை வரையறுத்துக் கூற வேண்டும். ஸுரைய்யா நட்சத்திரத்துக்கு நஜ்ம் என்று குறிப் பிடுவதைப்போல.'

2

மதீனாவின் பொதுவான சிறப்புகள்

*

1. மதீனாவில் தங்குவதன் சிறப்பு

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَالْمَدِينَةُ خَيْرٌ لَهُمْ لَوْ كَانُوا يَعْلَمُونَ

அவர்கள் அறிந்துகொள்பவர்களாக இருந்தால் மதீனா அவர்களுக்குச் சிறந்தது. (ஸுஃப்யான் ؓ, புகாரீ 1875)

இந்த நபிமொழியில் மதீனாவில் தங்குவதன் சிறப்பு பற்றி நபி ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள். இங்கு வசிப்பவருக்குப் பல நலவுகளும் அபிவிருத்தியும் பிரயோசனங்களும் கிடைப்பதால் அதன் பக்கம் ஆர்வமூட்டுகிறார்கள்.

2. மனிதர்களில் கெட்டவர்களையும் குழப்பக்காரர்களையும் வெளியேற்றும்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மதீனா பற்றி கூறினார்கள்:

وَهِيَ الْمَدِينَةُ تَنْفِي النَّاسَ كَمَا يَنْفِي الْكِيرُ خَبَثَ الْحَدِيدِ

(கொல்லனின் பட்டறையில்) நெருப்பு ஊதும் கருவி இரும்பின் அழுக்கை வெளியேற்றுவதைப்போல் மனிதர்க(ளில் கெட்டவர்க)ளை மதீனா வெளியேற்றும். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, புகாரீ 1871)

முஸ்லிமின் அறிவிப்பில்:

أَلَا إِنَّ الْمَدِينَةَ كَالْكِيرِ، تُخْرِجُ الْخَبِيثَ

அறிந்துகொள்ளுங்கள். நிச்சயமாக மதீனா (கொல்லன் பட்டறையின்) இரும்பு காய்ச்சும் கருவிபோல் அழுக்குகளை வெளியேற்றிவிடும். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ,

3

மதீனாவின் பிரத்தியேகமான சிறப்புகள்

*

பொதுப்படையாக மதீனாவின் சிறப்பு மற்றும் கண்ணியம் பற்றி நபிமொழிகள் வந்துள்ளதைப் போன்று அதிலே உள்ள சில விசயங்களைக் குறிப்பிட்டு அதன் பிரத்தியேகமான சிறப்புகளை விளக்கி வேறு சில நபிமொழிகளும் வந்துள்ளன. அவற்றில் சில பின்வருமாறு:

1. மஸ்ஜிதுந் நபவீயில் தொழுவதன் சிறப்பு

இப்னு உமர் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

صَلاَةٌ فِي مَسْجِدِى هَذَا أَفْضَلُ مِنْ أَلْفِ صَلاَةٍ فِيمَا سِوَاهُ إِلاَّ الْمَسْجِدَ الْحَرَامَ

எனது இந்த மஸ்ஜிதிலே தொழுவது, இது அல்லாத வேறு மஸ்ஜிதுகளில் ஆயிரம் தொழுகை நிறைவேற்றுவதைவிடச் சிறந்தது, மஸ்ஜிதுல் ஹறாமைத் தவிர. (முஸ்லிம் 1394)

மஸ்ஜிதுந் நபவீயிலே தொழுவதன் கூலி இரட்டிப்பானது என்பதற்கு இதிலே ஆதாரம் உள்ளது. அதிலே ஒரு தொழுகை தொழுவது, ஏனைய பள்ளிகளிலே ஆயிரம் தொழுகை தொழுவதைவிடச் சிறப்பானதாகும். ஆனால், மஸ்ஜிதுல் ஹறாமைத் தவிர. அதிலே தொழுவது ஏனைய மஸ்ஜித்களில் ஒரு இலட்சம் தொழுகை தொழுவதைவிடவும், மஸ்ஜிதுந் நபவீயிலே நூறு தொழுகைகள் தொழுவதைவிடவும் சிறப்பானதாகும். நபி ﷺ அவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் ﷺ அவர்கள் அறிவிக்கும் பின்வரும் செய்தி பலவீனமானதாகும்.

مَنْ صَلَّى فِي مَسْجِدِي أَرْبَعِينَ صَلَاةً، لَا يَفُوتُهُ صَلَاةٌ، كُتِبَتْ لَهُ بَرَاءَةٌ مِنَ النَّارِ، وَنَجَاةٌ مِنَ الْعَذَابِ، وَبَرِئَ مِنَ النِّفَاقِ

1

மதீனா பயணமும் மார்க்கமும்

*

மதீனா நபவிய்யாவில் தரிசிப்பது ஆர்வமூட்டப்பட்ட பல இடங்கள் உள்ளன. அதைத் தரிசிப்பவருக்கு நன்மை கிடைக்கும். அதேபோல் தரிசிப்பது மார்க்கமாக்கப்படாத இடங்களும் உண்டு. இதனால் தரிசிப்பவர் அதைத் தெரிந்திருப்பது முக்கியமானதாகும்.

தனது முயற்சியை அல்லாஹ்விடம் நெருக்கம் தேடித் தரும் வழிகளில் செலவழிக்கவும், இஸ்லாம் காட்டித்தராத இடங்களுக்குச் சென்று தனது நேரத்தை வீணாக்குவதை விட்டும் தூரமாயிருக்கவும் இது உதவியாக இருக்கும். அல்லது சில வேளைகளில் அங்கு செல்வதன் மூலமாகப் பிழையான செயல்களும், நம்பிக்கைகளும் உடன்வருவதால் தனது மார்க்கத்துக்குத் தீங்கை தேடிக்கொள்ளும் நூதன அனுஷ்டானங்களுக்கான இடங்களும் உள்ளன.

எனவே, தரிசிப்பது மார்க்கமாக்கப்பட்ட மற்றும் மார்க்கமாக்கப்படாத இடங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவதோடு தரிசிப்பவருக்குத் தேவையான சில விழிப்பூட்டல்களையும் இனிவரும் தலைப்புகளில் விவரிக்கின்றோம்.

5

நபி ﷺ அவர்களின் மண்ணறையைத் தரிசித்தல்

*

1. அல்லாஹ் ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்

மதீனா நபவிய்யாவை தரிசிக்கும் ஒருவர் மற்ற மண்ணறை களைப்போல் நபி ﷺ அவர்களின் மண்ணறையை அடைந்து விடவோ, தரிசிக்கவோ முடியாது. ஏனெனில், அவர்கள் தனது வீட்டிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவரது மண் ணறை ஏராளமான சுவர்களால் சூழப்பட்டுள்ளன. எனவே, மற்ற மண்ணறைகளைப்போல் அவரது மண்ணறையின் முன் நேரடியாக நிற்பது சாத்தியமற்றது.

இது, தான் விரும்பாத நூதன அனுஷ்டானங்களும், இணை வைப்புகளும் அவ்விடத்தில் நடக்காதிருப்பதற்காக அல்லாஹ் தனது தூதரின் மண்ணறைக்கு வழங்கியிருக்கும் பாதுகாப் பாகும். தனது நபியின் பிரார்த்தனைக்கான அல்லாஹ்வின் அங்கீகாரமாகக்கூட இது இருக்கலாம்.

அபூ ஹுறைறா ﷺ அவர்கள் அறிவிக்கும் நபிமொழியில் அவர்கள் கூறுகிறார்கள்:

اللّٰهُمَّ لاَ تَجْعَلْ قَبْرِي وَثَنًا يُعْبَدُ

அல்லாஹ்வே! எனது மண்ணறையை வணங்கப்படக்கூடிய ஒரு சிலையாக ஆக்கிவிடாதே. (முஅத்தா மாலிக் 414)

எனவே, பித்அத்துவாதிகளோ, மற்றவர்களோ நபி ﷺ அவர் களது மண்ணறையை அடைந்துவிட முடியாது, யாரும் அதைக்கொண்டாட்டமாகவோ, சிலையாகவோ, மஸ்ஜி தாகவோ எடுத்துக்கொள்ள இயலாது. இவ்வாறு பாதுகாத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

அதை விடுவதுதான் சிறந்தது. இந்தச் சமுதாயத்தின் ஆரம்பக் காலங்களில் வாழ்ந்தோரிடம் இருந்த சீர்திருத்தம்தான் கடைசியில் வாழ்வோரையும் சீர்திருத்தும். இந்தச் சமுதாயத்தின் முன்வாழ்ந்தவர்கள் அவ்வாறு செய்ததாக நான் கேள்விப்படவில்லை. அதை நாடி வருவோர், அல்லது பிரயாணத்திலிருந்து வருவோர் தவிர ஏனையோருக்கு அது வெறுக்கத் தக்கதாகும்.'

5. பித்அத்துகளைச் செய்யக் கூடாது

நபி ﷺ அவர்களது மஸ்ஜிதிலே பித்அத்துவாதிகளும், அறிவீனர்களும் செய்தவற்றிலிருந்து தரிசிப்பவர் தவிர்ந்துகொள்ள வேண்டும். மிஹ்ராப், மிம்பர், சுவர்கள், கதவுகள் போன்ற வற்றைத் தடவுதல், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் அறையைச் சுற்றியுள்ள சுவர்கள், ஜன்னல்கள் ஆகியவற்றைத் தடவுதல், முத்தமிடுதல், அல்லது அதை வலம் வருவதற்கு முயற்சி செய்தல், பிரார்த்தனைகள், வஸிய்யத் எனும் உபதேசங்கள் அடங்கிய தாள்களை வைத்தல், அல்லது தொழுகை மற்றும் பிரார்த்தனைகளை அந்த இடத்தில் செய்ய எத்தனித்தல், அல்லது பிரார்த்தனையின் போது மண்ணறையை முன்னோக்குதல் போன்ற நபி ﷺ அவர்கள் தனது மரணப்படுக்கையில் எச்சரிக்கை செய்த, இதைப் போன்றதைச் செய்வோரைச் சபித்த, வெறுக்கத்தக்கப் பித்அத்துக்களை பித்அத்துவாதிகள் செய்தார்கள்.

இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

لَمَّا نَزَلَ بِرَسُولِ اللهِ صلى الله عليه وسلم طَفِقَ يَطْرَحُ خَمِيصَةً لَهُ عَلَى وَجْهِهِ فَإِذَا اغْتَمَّ بِهَا كَشَفَهَا عَنْ وَجْهِهِ فَقَالَ وَهُوَ كَذَلِكَ لَعْنَةُ اللهِ عَلَى الْيَهُودِ وَالنَّصَارَى اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسَاجِدَ يُحَذِّرُ مَا صَنَعُوا

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுக்கு மரணவேதனை வந்தபோது தனது ஒரு போர்வைத் துண்டை தனது முகத்தின் மீது போட ஆரம்பித்தார்கள். அதன் மூலம் அவர்களுக்கு மூச்சு முட்டினால் அதைத் தனது முகத்திலிருந்து நீக்குவார்கள். இதே நிலையில் அவர்கள் கூறினார்கள்: 'யூத, கிறித்துவர்கள்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும். அவர்கள்

6

பகீஉ மற்றும் உஹுது ஷுஹதாக்களின் மண்ணறைகளைத் தரிசித்தல்

*

பகீஉ மற்றும் உஹுது ஷுஹதாக்களின் மண்ணறைகளை தரிசிப்பதோடு தொடர்பான சில குறிப்புகளை இங்குக் கவனத்தில் கொள்வோம்.

1. மறுமையை நினைவுகூர்தல்; ஒப்பாரியைத் தவிர்த்தல்

பகீஉ மற்றும் உஹுது ஷுஹதாக்களை தரிசிப்பவர், தரிசிப்பதன் உண்மையான நோக்கம் மற்றும் அதன் சட்டங்களை நினைவில்கொள்ள வேண்டும். அதன்மூலம் எதிர்பார்க்கப்படுவது மறுமையை ஞாபகமூட்டிக்கொள்வதும், அடக்கம் செய்யப்பட்டிருப்பவருக்காகப் பிரார்த்தித்தல், அல்லாஹ்வின் பாவமன்னிப்பு, கருணை, ஈடேற்றம் வேண்டி இறைஞ்சுதல் ஆகியவற்றின் மூலம் அவருக்கு நன்மை பயப்பதும் ஆகும். தரிசிப்பவர் இதன் மூலம் தனக்கும், மரணித்தவருக்கும் நலவு செய்பவராக ஆகிறார். ஸஹீஹான நபிமொழிகள் இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. அவற்றில் சில முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, ஆத்திரம், கோபம், உயர்ந்த சப்தத்தில் பிரார்த்தித்தல், ஒப்பாரி வைத்து அழுதல் போன்ற வற்றை அவர் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

2. வணக்கத்தலங்களாக ஆக்குதல் கூடாது

மண்ணறைகளை வணக்கத்தலங்களாக எடுத்துக்கொள்வது கூடாது. அதாவது, மஸ்ஜித்கள் போன்று அவ்விடத்தில் தொழுவதன் மூலம் வணக்கம் புரிவதற்கான இடமாக எடுத்துக் கொள்வது தடைசெய்யப்பட்டதாகும். அதே போன்று அவ்விடத்தில் பிரார்த்திப்பது மற்றும் குர்ஆன் ஓதுவதை

1

நபி ﷺ அவர்களை நேசிப்பதன் முக்கியத்துவம்

*

நபியவர்கள் அனைவருக்குமான தூதர்

அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ் வின் தூதர் ஆவார். அவரை அல்லாஹ் சகல மக்களுக்கும் நபியாக, ரஸூலாக அனுப்பினான். அவரோடு நபித்துவம், தூதுத்துவம் என்பவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ يَاأَيُّهَا النَّاسُ إِنِّي رَسُولُ اللَّهِ إِلَيْكُمْ جَمِيعًا

(நபியே!) கூறுவீராக: மக்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்குமான அல்லாஹ்வின் தூதராவேன். (7:158),

مَا كَانَ مُحَمَّدٌ أَبَا أَحَدٍ مِنْ رِجَالِكُمْ وَلَكِنْ رَسُولَ اللَّهِ وَخَاتَمَ النَّبِيِّينَ

முஹம்மது அவர்கள் உங்களுடைய ஆண்கள் எவருக்கும் தந்தை இல்லை. ஆனால், அவர் அல்லாஹ்வின் தூதரும், நபிமார்களில் இறுதியானவருமாவார். (குர்ஆன் 33:40)

அல்லாஹ் அவரை உலகத்தாருக்கு ஓர் அருட்கொடையாகவும், அனைத்துப் படைப்புகளுக்கும் ஆதாரமாகவும் அனுப்பி வைத்தான். அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِلْعَالَمِينَ

(நபியே!) உம்மை நாம் உலகத்தாருக்கு ஓர் அருட்கொடை யாகவே தவிர அனுப்பவில்லை. (குர்ஆன் 21:107)

நபியவர்கள் அல்லாஹ்வின் ஓர் அருட்கொடை

கவுரவத்திற்குரிய இந்த நபியை அனுப்பியதன் மூலம் அல்லாஹ் மனித குலத்திற்கு அருள்புரிந்துள்ளான். அவர் நேர்வழிகாட்டக்

2

நபி ﷺ அவர்கள்மீதான நேசத்தின் அடையாளங்கள்

*

1. பூரணமான முறையில் கவுரவப்படுத்தலும் கண்ணியப்படுத்தலும்

நபி ﷺ அவர்களை அவரது தரத்திற்கும், உயர்ந்த நிலைக்கும் ஏற்ப கவுரவப்படுத்துவதும், கண்ணியப்படுத்துவதும் உண்மையான நபித்துவத்தின் ஆதாரங்களில் முக்கியமானவையாகும். அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّا أَرْسَلْنَاكَ شَاهِدًا وَمُبَشِّرًا وَنَذِيرًا لِتُؤْمِنُوا بِاللَّهِ وَرَسُولِهِ وَتُعَزِّرُوهُ وَتُوَقِّرُوهُ وَتُسَبِّحُوهُ بُكْرَةً وَأَصِيلًا

(நபியே!) நிச்சயமாக நாம் உம்மை சாட்சியாளராகவும், நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பினோம். (மக்களே!) அது ஏனெனில், நீங்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கைகொள்வதற்காகவும், அவருக்கு உதவி செய்து, அவரைக் கவுரவப்படுத்தி, (அல்லாஹ்வாகிய) அவனை காலையிலும் மாலையிலும் துதிப்பதற்காகவுமே அவ்வாறு அனுப்பினோம். (குர்ஆன் 48:8-9)

எனவே, ஈமான்கொள்வது அல்லாஹ்வோடும் அவனது தூதரோடும் தொடர்பானதாகும். துதிப்பது அல்லாஹ்வுக்கு மட்டும் உரியதும், உதவி புரிந்து, கவுரவப்படுத்துதல் தூதர் ﷺ அவர்களுக்கு மட்டும் உரியதுமாகும்.

அல்லாஹ்வுடைய தூதர் ﷺ அவர்களை உண்மையாகவே கவுரவித்து, பெருமைப்படுத்துவதில் நபித்தோழர்கள் மிகப் பெரும் முன்மாதிரிகளை காட்டிச் சென்றுள்ளனர். தமது

3

நபித்தோழர்களின் சிறப்புகள்

*

ஸஹாபி என்றால்

ஸஹாபி (நபித்தோழர்) என்பவர் யாரெனில், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களை நம்பிக்கை கொண்டு, அவர்களைச் சந்தித்தவரும் அதே நிலையில் மரணித்தவரும் ஆவார். நபித்தோழர்களான ஸஹாபாக்கள் இந்தச் சமுதாயத்திலேயே மிகச் சிறந்தவர்களும் மனிதர்களிலேயே நல்லவர்களு மாவர்.

அல்லாஹ்வினால் பொருந்திக்கொள்ளப்பட்டவர்கள்

அல்லாஹ் அவர்களைத் தனது நபியின் தோழர்களாகத் தெரிவு செய்தான். எனவே, அவரை விசுவாசம் கொண்டு, அவருக்கு உதவியும் செய்தனர். அல்லாஹ்வின் பாதையில் தடைகளை யும் புறக்கணிப்புகளையும் கஷ்டங்களையும் நோவினை களையும் சகித்துக்கொண்டு மார்க்கத்தை எடுத்துரைத்தார்கள். இன்னும் மனமுரண்டாக எதிர்த்தவர்களோடு தர்ம யுத்தம் புரிந்தார்கள். எனவே, அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான்; அவர்களின்மீது திருப்தி அடைந்தான்.

அல்லாஹ்வினால் வேதங்களில் முன்னறிவிக்கப்பட்டவர்கள்

அல்லாஹ் தஆலா தனது கண்ணியத்துக்குரிய வேதத்தில் அவர்களைப் புகழ்ந்து பேசியுள்ளான்.

مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا يَبْتَغُونَ فَضْلًا مِنَ اللَّهِ وَرِضْوَانًا سِيمَاهُمْ فِي وُجُوهِهِمْ مِنْ أَثَرِ السُّجُودِ ذَلِكَ مَثَلُهُمْ فِي التَّوْرَاةِ وَمَثَلُهُمْ فِي الْإِنْجِيلِ كَزَرْعٍ أَخْرَجَ شَطْأَهُ فَآزَرَهُ فَاسْتَغْلَظَ فَاسْتَوَى عَلَى سُوقِهِ